TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8110267

1. District மாவட்டம் : தேனி
PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு
Year ஆண்டு: 2020
FIR No. மு.த.அ. எண்: 06/2020
Date: நாள் 12.12.2020

2. (i) Act சட்டம்: CrPC — Sections பிரிவுகள்: 102
(ii) Act சட்டம்: PC Act 1988 as amended — Sections பிரிவுகள்: 7
(iii) Act சட்டம்: by the PC (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல் 12.12.2020
Date to : நாள் வரை
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல் 0400 hrs
Time to : நேரம் வரை 0900 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 12.12.2020
Time : நேரம் 1100 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 12.12.2020
Time : நேரம் 1200 hrs

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலமாக.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 4 கி.மீ தென்மேற்கு
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி போக்குவரத்துத்துறை சோதனைச் சாவடி, பழனிச்செட்டிபட்டி, தேனி தாலுகா, தேனி மாவட்டம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.அ.அசோக்குமார்
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.அய்யல்சாமி
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : நாட்டினம் இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் ஆய்வுக்குழு ஆய்வாளர்
(g) Address : முகவரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மதுரை.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) திரு.தே.ராஜசேகரன், மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில்நுட்பமற்றது)
2) திரு.எம்.ரமேஷ்பாபு, அலுவலக உதவியாளர், போக்குவரத்துத்துறை சோதனைச் சாவடி, பழனிச்செட்டிபட்டி, தேனி மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / Involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / Involved
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required)
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் திரு. M. சத்தியசீலன் பதவி காவல் ஆய்வாளர் நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு உ.கு.பு.பிரிவு, மதுரை (பொறுப்பு) தேனி.... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

(signature) 12/12/2020

15. Date & Time of despatch to the court: 12.12.2020 13 Hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் .....................
Rank: நிலை ..................... No எண் .....................

**Submitted:**

இன்று 12.12.2020ம் தேதி காலை 04.00 மணிக்கு காலம் 4ல் கண்ட அலுவலர்கள் சகிதம் தேனி மாவட்டம் குமுளி to தேனி மெயின்ரோட்டில் மேற்குப்பக்கம் பழனிச்செட்டிபட்டியில் உள்ள அரசு போக்குவரத்து கழக பணிமனைக்கு தெற்குப்பக்கம் தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலகத்திற்கு வடக்குப்பக்கம் கிழக்குப் பார்த்து அமைந்துள்ள போக்குவரத்துத்துறை சோதனைச்சாவடியில் கேரள மாநிலம் செல்வதற்கு நான்கு சக்கர வாகனங்களுக்கு தற்காலிக அனுமதிசீட்டு வழங்குவதில் அரசு நிர்ணயித்த தொகைக்கு அதிகமாக முறைகேடாக பணம் வசூல் செய்வதாக கிடைத்த நம்பகமான தகவலின்பேரில் மதுரை ஆய்வுக்குழு ஆய்வாளர் மற்றும் காவல் ஆய்வாளர், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தேனி மாவட்டம் ஆகியோர்கள்மூலம் இணை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி அலுவலகம் அரசு போக்குவ்ரத்துக் கழக பணிமனைக்குச் சொந்தமானது. இதில் இரண்டு தளங்கள் உள்ளது. கீழ்தளத்தில் மேற்படி போக்குவரத்துதுறை சோதனைச்சாவடி கிழக்குப் பார்த்து வாசல்கொண்டு இயங்கிவருகிறது. மேல்தளத்தில் போக்குவரத்துதுறை பணிமனையின் அலுவலகம் செயல்பட்டு வருகிறது. மேற்படி அலுவலகத்தின் கீழ்தளத்தில் முன்புறம் வராண்டாவும், அதன் இடதுபக்கம் ஓய்வு அறையும், அதன் பின்பக்கம் ஆவண அறையும், வலது பக்கம் மற்றொரு ஆவண வைப்பு அறையும் அதில் வடக்குப் பார்த்து கதவும் உள்ளது. மேற்படி அலுவலக வராண்டாவின் வலது பக்கம் கிழக்குப்பார்த்து மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில்நுட்பமற்றது) அவர்களின் இருக்கையும், அதற்குப் பின்பக்கம் இரண்டு கணினி மேஜைகளும், வராண்டாவின் வலதுபக்கம் இரண்டு கணினிகள் மற்றும் இரண்டு பிரிண்டர்களுடன் உள்ளது. இந்த கணினிகளில் Login Name K.ராஜசேகரன் என்ற பெயரில் இயங்கிவருகிறது. இந்த இரண்டு கணினிகளிலிருந்து வாகனங்களுக்கான தற்காலிக அனுமதி சீட்டுக்கான பணம் பெற்றுக்கொண்டு இரசீதுகள் கணினி மூலம் பதிவு செய்து கொடுக்கப்படுகிறது. மேற்படி வராண்டாவின் மேற்கு சுவரையொட்டி மேஜைகள் போடப்பட்டு அதன்மீது ஆவணங்கள் வைக்கப்பட்டுள்ளன. ஆய்வுக்குழுவினர் மேற்படி அலுவலகத்தில் நுழைந்தபோது திரு.கே.ராஜசேகரன், மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில்நுட்பமற்றது) மற்றும் அலுவலக உதவியாளர் திரு.எம்.ரமேஷ்பாபு ஆகியோர்கள் பணியில் இருந்தனர். மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில்நுட்பமற்றது), அவர்கள் வட்டார போக்குவரத்து அலுவலகம், தேனி என்பவர்

வராண்டாவில் இருந்த வலதுபக்க கணினியில் வாகனங்களுக்கு தற்காலிக அனுமதிசீட்டு வழங்க பதிவேற்றம் செய்யும் வேலைசெய்து கொண்டிருந்தார். இந்த ஆய்வின்போது அலுவலகத்தில் இருந்த தினசரி வாகன வரிவசூல் கணினி அறிக்கையை பார்வையிட்டதில் தலைப்பு வாரியாக வசூலில் rajas என்ற பயனாளரின் கணக்கு(Username)ல் ரூ.18,320/-, rajas 1 என்ற பயனாளரின் கணக்கு ரூ.42,810/- எனவும், rajas 2ல் என்ற பயனாளரின் கணக்கு (Username)ல் ரூ.7,480/- ஆக மொத்தம் ரூ.68,610/- என்று பதிவு செய்யப்பட்டிருந்தது. மேற்படி வசூல் செய்யப்பட்ட தொகைபற்றி மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில்நுட்பமற்றது) திரு.கே.ராஜசேகரன் அவர்களிடம் கேட்க அவர் 11.12.2020ம் தேதி 08.00 மணிமுதல் 19.45 மணிவரை வாகன தற்காலிக அனுமதி சீட்டுக்காக இரசீது எண்.L811422 முதல் L811482 வரை வசூல் செய்யப்பட்ட தொகை ரூ.18,320/- எனவும், 11.12.2020 இரவு 20.00 மணிமுதல் 12.12.2020 காலை 04.10 மணிவரை வாகன தற்காலிக அனுமதி சீட்டுக்காக இரசீது எண்.L811483 முதல் L811509 வரை வசூல் செய்யப்பட்ட தொகை ரூ.42,810/- எனவும். rajas 2ல் என்ற பயனாளரின் கணக்கு ரூ.7,480/- என்ற தொகையானது 10.12.2020 காலை 08.00 மணிமுதல் 11.12.2020 வரை வசூல் செய்யப்பட்ட தொகை 11.12.2020ம் தேதி பாரத ஸ்டேட் வங்கியில் செலுத்தப்பட்டுவிட்டது என்றும் தெரிவித்தார். மேற்படி அலுவலகத்தின் கீழ்தளத்தில் முன்புறம் வராண்டாவும், அதன் இடதுபக்கம் ஓய்வு அறையும், அதிலுள்ள இரும்பு பிரோவை சோதனையிட உள்அடுக்கில் உள்ள லாக்கரில் பிளாஸ்டிக் டப்பாவில் ரூ.18,320/- மற்றும் ரூ.160/-ம் இருந்தது. அதைப்பற்றி கேட்க அவர் 11.12.2020ம் தேதி காலை 08.00 மணிமுதல் இரவு 08.00 மணிவரை வாகன வரி வசூல் செய்யப்பட்ட பணம் என்றும், ரூ.160/-ஐ 1% தொழிலாளர் நலநிதி என்றும் அதை வங்கியில் செலுத்துவதற்கு வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார். பின்னர் மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளரின் இருக்கையின் வலதுபக்க டிராயரை சோதனையிட்டு அதிலிருந்த பணம் ரூ.42,810/- இருந்தது. அதைப்பற்றி கேட்க அவர் 11.12.2020ம் தேதி இரவு 08.00 மணிமுதல் 12.12.2020 ம் தேதி காலை 04.00 மணிவரை வாகன வரி வசூல் செய்யப்பட்ட பணம் என்றும், 12.12.2020ம் தேதி காலை 08.00 மணிக்கு கணக்கு முடித்து வங்கியில் செலுத்தவேண்டுமென்றும் கூறினார். கொடிநாள் வசூல் பதிவேடு பற்றி கேட்க, கொடிநாள் வசூல் ஏதும் செய்யப்படவில்லை என்றும், கொடிநாள் பதிவேடு ஏதும் பராமரிக்கப்படவில்லை. மேலும் மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில்நுட்பமற்றது) அவர்களை சோதனை செய்ய அவரிடம் ரூ.1,140/- இருந்தது. அதைபற்றி விசாரிக்க அவர் தனது சொந்த பணம் என்று சொல்ல அதை திரும்ப அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. மேலும் அலுவலகத்தில் ஆஜரிலிருந்த அலுவலக உதவியாளர் திரு.எம்.ரமேஷ்பாபு என்பவரை சோதனைசெய்ய அவரிடம்

பணம் ஏதும் காணப்படவில்லை. மேலும் அலுவலகத்தின் வடக்குப்பக்கம் மற்றும் அதற்கு எதிர்தாற்போல் இருந்த ஆவண வைப்பறை, மோட்டார் வாகன ஆய்வாளர் அறை மற்றும் மேஜைகள், கணினி மேஜைகள் சோதனையிட்டதில் பணம் ஏதும் கைப்பற்றப்படவில்லை. மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் ஓய்வறையில் சோதனை செய்யப்பட்டபோது அங்குள்ள இரும்பு மேஜையின் அடிப்பக்கத்தில் ரூ.5,500/- (500X10=500, 200X1=200, 100X2=200, 50X2=100) கண்டெடுக்கப்பட்டது. இதுபற்றி மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.கே.ராஜசேகரன் மற்றும் அலுவலக உதவியாளர் திரு.ரமேஷ்பாபு ஆகியோர்களிடம் விசாரிக்க அவர்கள் மேற்படி பணத்திற்கு தகுந்த முகாந்திரம் தெரிவிக்கவில்லை. எனவே மேற்படி எடுக்கப்பட்ட பணம் ரூ.5,500/-ஐ சந்தேகத்திற்கு இடமான கணக்கில் வராத பணமாகக் கருதி கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி அலுவலகத்தில் பராமரிக்கப்படும் தினசரி பண கையிறுப்புபதிவேடு பார்வையிட அதில் 11.12.2020 தேதியிட்டு திரு. கே.ராஜசேகரன். மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில்நுட்பமற்றது) அவர்கள் தனது கையிருப்பாக ரூ.2,540/- இருந்ததாக குறிப்பிட்டுள்ளார். இதில் இரவு உணவு மற்றும் சிற்றுண்டி செலவு செய்தது போக சோதனையின்போது தனது கைவசம் ரூ.1,140/- இருந்ததாக சொன்னார். மேலும் அலவலக உதவியாளர் திரு.ரமேஷ்பாபு அவர்கள் தனது கையிருப்பாக ரூ.1,00/- இருந்ததாக குறிப்பிட்டுள்ளார். இதில் இரவு உணவு மற்றும் சிற்றுண்டி செலவு செய்தது போக சோதனையின்போது தனது கைவசம் பணம் ஏதும் இல்லை என்று சொன்னார். மேற்படி அலுவலகத்தில் பணியாளர் வருகைப்பதிவேடு 2020ஐ பார்வையிட அதில் 11.12.2020 ஆம் தேதி மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. கே.ராஜசேகரன் அவர்கள் சுருக்கொப்பம் செய்துள்ளார். அதன்படி இந்த அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில்நுட்பமற்றது) ஆக 1)திரு.சரவணன், 2)திருமதி.கோ.லதா ஆகியோர் சுழற்சி முறையில் பணியாற்றி வருகிறார்கள். 2020ம் ஆண்டு மாற்றுப்பணி பதிவேட்டில் பார்வையிட்டதில் அலுவலக உதவியாளர் திரு.ரமேஷ்பாபு என்பவர் 11.12.2020ம் தேதி சுருக்கொப்பம் செய்திருந்தார். மேற்படி சோதனையில் மேற்படி குறிப்பிடப்பட்ட கணக்கில் வராதபணம் ரூ.5,500/- கைப்பற்றப்பட்டது. இத்துடன் விசாரணைக்காக மேற்படி அலுவலகத்திலிருந்து வருகைப்பதிவேடு டிசம்பர்—2020, 2)பணியாளர்கள் ரொக்ககையிருப்பு பதிவேடு, மற்றும் 3)மாற்றுப்பபணி பணியாளர்கள் பதிவேடு டிசம்பர்-2020 மற்றும் 4)11.12.2020 மற்றும் 12.12.2020ம் தேதி தினசரி வாகன வரிவசூல் கணினி அறிக்கை ஆகியவை மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.கே.ராஜசேகரன் அவர்களின் ஒப்புதல் கையொப்பம் பெற்று பெறப்பட்டது. மேலும் இன்று காலை 08.00 மணிக்கு திரு.கே.ராஜசேகரன், மோட்டார்

வாகன ஆய்வாளர் (தொழில்நுட்பமற்றது) என்பவரை சுழற்சிமுறையில் பணியிலிருந்து விடுவிக்க திரு.எஸ்.சரவணன் மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில்நுட்பமற்றது) என்பவர் ஆஜரானார். மேலும் இச்சோதனையின்போது அலுவலகத்தில் இருந்த ஆவணங்களுக்கோ மற்ற பொருட்களுக்கோ சேதங்கள் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை. மேலும் இச்சோதனையின் போது இருந்த போக்குவரத்துத்துறை சோதனைச்சாவடி அலுவலக அலுவலர்களுக்கோ, மற்றவர்களுக்கோ உடல் ரீதியாகவோ மற்றும் மனரீதியாகவோ எவ்வித துன்புறுத்தல்களும் ஏற்படுத்தப்படவில்லை. திடீர் இணை ஆய்வு 12.12.2020ம் தேதி தேனி மாவட்டம்.தேனி, பழனிசெட்டிபட்டி போக்குவரத்துத்துறை சோதனைச்சாவடியில் நான் மற்றும் தேனி மாவட்ட ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திடீர் இணை ஆய்வின்போது கணக்கில் வராத ரூ.5,500/- மற்றும் சம்மந்தப்பட்ட ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. மேற்படி கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் சம்மந்தப்பட்ட ஆவணங்களை மேல்நடவடிக்கைகாக இக்கடிதம்மூலம் தங்களுக்கு அனுப்புகின்றேன். எனவே, மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில்நுட்பமற்றது) திரு.கே.ராஜசேகரன் மற்றும் அலுவலக உதவியாளர்மீது வழக்கு பதிந்து நடவடிக்கை எடுக்க தங்களிடம் அளிக்கின்றேன். ஒப்பம்/-XXXXX 12.12.2020 (அ.அசோக்குமார்), ஆய்வுக்குழு ஆய்வாளர், மதுரை.

Sir, Received the report today (12.12.2020) at 11.00 hrs along with Joint Surprise Check proceedings, dated: 12.12.2020, Statements, Seized Documents, Cash Rs.5,500/-. After obtaining permission from the Superior Officers, I (Tmt.R.Geetha, Inspector of Police, V&AC, Theni) registered a case in Theni V&AC Cr.No.06/2020 u/s.102CrPC and 7 of Prevention of Corruption Act – 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act—2018 on 12.12.2020 at 12.00 hrs Sd/-XXXXX (R.Geetha), Inspector of Police, V&AC, Theni, 12.12.2020.

The original FIR along with report of Tr.A.Ashokkumar, Joint Surprise check proceedings dated.12.12.2020, submitted to the Hon'ble Special judge , Special Court for the Trial of cases under PC Act, Theni and other copies were sent to the officers concerned.

Geetha R
12/12/2020
Inspector of Police
V&AC Theni